1972 சனவரி 25]

நாட்டின் மொத்த மக்கட்தொகையில் 5.11 சதவீதம்மாகும். காவல்துறையில் மாத்திரம் முஸ்லிம்களுக்கு பிரதிநிதித்துவம் தரப்பட்டிருப்பது 4.04 சத வீதம் ஆகும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஸப்-இன்ஸ்பெக்டர் பதவிக்கு மேலாக உள்ள அதிகாரிகள் பதவிக்கு முஸ்லிம் மக்கள் எத்தனே சதவீதம் நியமிக்கப்பட்டிருக்கிறுர்கள் என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி: என்னிடத்தில் உள்ள விவரப்படி, காவல்துறையில் முஸ்லிம் மக்கள் 4.04 சத வீதம்; காவல் துறை நிர்வாகப் பதவியில் (எக்ஸிக்யூடிவ் சர்வீஸ்) 4.06 சதவீதம்; எழுத்துப் பணிப் பதவிகளில் (மினிஸ்ட்டீரியல் சர்வீஸ்) 4.04 சதவீதம்.

திரு. ஆ. பரந்தாமன்: இப்படி காவல் துறையில் கொடுக்கப் படுகின்ற பிரதிநிதித்துவம் மத அடிப்படையில் இல்லாமல், தகுதியின் அடிப்படையில் கொடுப்பதற்கு அரசு ஏதாவது உத்தேசித்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி: நான் ஏற்கனவே அதற்குப் பதில் கூறிவிட்டேன்.

முதியோர் உதவித் தொகை

* 34 வினு—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதியோர் உதவித் தொகையை உயர்த்தும் செயற் குறிப்பு அரசு பரிசீலனேயில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி: (அ) இல்லே.

(இ) இந்த வினு எழவில்லே.

திரு. சு. துரைசாமி: முதியோருக்குக் கொடுக்கும் உதவித் தொகை மிகக் குறைவாக இருக்கிறது. ஆகவே, இப்பொழுது கொடுக்கப்படும் உதவித் தொகையோடு இன்னும் ஒரு பத்து ரூபாய் சேர்த்துக்கொடுத்தால் எவ்வளவு செலவு ஏற்படும் என்று தெரிவிக்க முடியுமா? அப்படி பத்து ரூபாய் உயர்த்திக் கொடுக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி: இப்போதே ஆண்டொன் றுக்கு முதியோர் உதவித் தொகை என்ற வகையில் ஒரு கோடி ரூபாய் அரசுக்கு செலவாகிக் கொண்டிருக்கிறது. இன்னும் அதை அதிகப்படுத்துவது இப்பொழுது இயலாத காரியமாக உள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்பொழுது முதியோருக்குக் கொடுக்கும் உதவித் தொகை ரூ. 20 அல்லது ரூ. 30 என்று நினைக்கிறேன். அந்தத் தொகையை வைத்துக்கொண்டு எந்த அளவுக்கு அவர்கள் காலத்தை நடத்த முடியும் என்று தெரியவில்லை. ஆகவே, இன்றைக்கு தியாகிகளுக்குக் கொடுக்கக்கூடிய அளவுக்கு ஐம்பது ரூபாயாக உயர்த்த முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நாம் தியாகிகளையும் முதியோர்களையும் ஒன்றாகக் கருதுவது நல்லதல்ல.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, முதியோர்களுக்குக் கொடுக்கக்கூடிய பென்ஷன் தொகை மாதக் கடைசியில் தான் கிடைக்கிறது. அது மாத ஆரம்பத்திலேயே அவர்களுக்குக் கிடைத்தால் அந்த மாதத்தைக் கடத்துவதற்கு அவர்களுக்கு சௌகரியமாக இருக்கும். ஆகவே, அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது வாழ்வின் கடைசியில் கொடுக்கப்படுவதாக இருப்பதால் மாதக் கடைசியில் கொடுக்கப்படுகிறதோ என்னவோ ! (சிரிப்பு) இனி, அம்மையார் அவர்கள் கூறிய அந்தக் குறைபாடு நீக்கப்படுவதற்கு ஆவன செய்யப்படும்.

Tamil Nadu Raffles

* 35 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the proceeds from the sale of raffle tickets are to be allotted to medical institutions in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) விவர அறிக்கை @ ஒன்று பேரவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ் : கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மருத்துவ மனைகளுக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதுபற்றி தனியாகக் கேள்வி போட்டால் விவரம் அளிக்கலாம். இப்பொழுது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு லட்சம் ரூபாய் வீதம் பத்து மாவட்டங்களுக்கு இருபது இலட்சம் ரூபாய் அளிக்கப் பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்து தனி விவரம் இப்பொழுது இல்லை.

திரு. சு. துரைசாமி : பரிசுச் சீட்டு மூலமாக அரசுக்குக் கிடைத்த தொகை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

@ 208–209 பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.